29th July 1965]

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மதுரை கல்லூரி பிரின்சிபால் அவர்கள் அடிபட்டது குறித்து டயஸ் என்ற பெரிய போலீஸ் அதிகாரி, அவர்களிடம் வருத்தம் தெரிவித்தது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாக்கப்பட்டதற்கு போலீசார் வருத்தம் தெரிவித்தது உண்மைதான்.

திரு. முனு. ஆதி : மாணவர்களை அத்துமீறி அடக்கியிருக்கிறார்கள். பகலில் மறியல் செய்ததற்கு இரவில் மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். அதன் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் ஏற்கனவே அளித்த விடையைவிட வேறொன்றும் சொல்வதற்கில்லை. மாணவர்கள் கல்லை எறிந்து கலகம் செய்தார்கள். போலீசார் அவர்களைக் கலைக்க வேண்டியிருந்தது. தடி அடியும் கொடுக்க வேண்டியிருந்தது. ஆகவே, முன்பு அளித்த விடையைவிட வேறொன்றும் சொல்வதற்கில்லை.

Police firing during Anti-Hindi disturbances

* 23 *Q.*—SRI T. P. ALAGAMUTHU :
SRI S. MADHAVAN : and
SRI M. KARUNANITHI : } Will the **Hon. the** Chief Minister be pleased to state—

(*a*) the number of places in which the Police opened fire during the recent Anti-Hindi disturbances and the number of persons killed as a result thereof;

(*b*) whether any magisterial enquiries have been held in such cases; and

(*c*) if so, whether copies of reports of the enquiries will be placed on the Table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(*a*) Police opened fire in thirty-six places during the Anti-Hindi disturbances, resulting in fifty casualties.

(*b*) Magisterial enquiries have been ordered in all the cases of Police firings.

(*c*) The Government decline, in public interest to place copies of the enquiry reports on the Table of the House.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சூடுபட்டு இறந்தவர்களில் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களோடு, வேறு வேலை காரணமாக வந்தவர்களும் இருக்கிறார்களா? அப்படியிருந்தால் அவர்கள் எவ்வளவு பேர்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவைகளெல்லாம் விசாரணைக்குப் பிறகுதான் தெரியும்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, 36 இடங்களில் துப்பாக்கிச் சூடு ஏற்பட்டு, 50 பேர்கள் இறந்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு இடத்திலும் எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்று தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, அமைதிக்காக 36 இடங்களில் துப்பாக்கிச் சூடு ஏற்பட்டதாகச் சொன்னார்கள். ஆரணியில் துப்பாக்கிச் சூடு ஏற்பட்டபோது, குழாயடியில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த பெண்கள் மீதும், மாடிக் கட்டடத்தில் வேலைசெய்த கொத்தனார் மீதும் துப்பாக்கியால் சுட வேண்டிய அவசியம் என்ன என்று விளக்குவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும்.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, செஞ்சியில் இந்தி எதிர்ப்புப் போராட்ட கிளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டவர்கள் பிரபல காங்கிரஸ்காரர்கள் என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய தகவல் என்னிடம் இல்லை.

திரு. பி. முருகையன் : துப்பாக்கி சூட்டால் இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றித் தகவல் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, 50 பேர் இறந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். போலீசார் விவரங்கள் சேகரித்து இருக்கிற கணக்குப்படியே 137 பேர்கள் இறந்தார்கள் என்பது சர்க்காருக்கு தெரிவிக்கப்பட்டிருப்பது உண்மையா? அந்த விவரங்களை மன்றத்திற்குச் சொல்லாததற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் சொன்னதைவிட வேறு தகவல் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, விசாரணைகள் முடிவு பெறவில்லை என்று சொன்னார்கள். விசாரணைகள் முடிந்த பிறகு அந்த அறிக்கைகள் இந்த சபைமுன் வைக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விசாரணைக்குப் பிறகு கனம் அங்கத்தினர் தனிக்கேள்வி கொடுக்க வேண்டும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக எத்தனை அரசாங்க அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

29th July 1965]

திரு. கே. ஏ. மதியழகன் : சார், மாஜிஸ்ட்ரேட் விசாரணை என்று அமைச்சர் குறிப்பிட்டார்கள். இது மாதிரியான காரியங்களில் நீதிபதி விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. இந்த மாநில சர்க்காரைப் பொறுத்தவரையிலும் கூட, 1953-ல் இருந்து நீதிபதி விசாரணைகள் நடந்து வந்தது. டால்மியாபுரம், வால்பாரை நடுவட்டம் முதலிய இடங்களில் துப்பாக்கிச் சூடு ஏற்பட்டது. முதுகுளத்தூரில் நடந்த சம்பவத்தை விசாரிக்க ஒரு ரெவின்யூ போர்டு மெம்பரையும், ஒரு ஜட்ஜையும் போட்டார்கள். இப்பொழுது அது படிப்படியாகக் குறைந்து, ஆர்.டி.ஓ. விசாரிக்கும் நிலைக்கு வந்து விட்டது. நீதிபதி விசாரணை வேண்டும் என்கிற பலத்த கோரிக்கை இருந்தும், சர்க்கார் பிடிவாதமாக அதை மறுத்து வருவதற்குக் காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சாதாரணமாக ஆர்.டி.ஓ. எங்க்வயரி என்றாலும் அதுவும் மாஜிஸ்ட்ரேட் விசாரணைதான். அவரும் மாஜிஸ்ட்ரேட் என்ற ஹோதாவில்தான் விசாரணை செய்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில், சம்பவத்திற்கு ஏற்றவாறு நீதிபதிகளையும் போடுகிறோம். அண்ணாமலை பல்கலைக் கழக துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி விசாரிக்க அந்த ஜில்லா நீதிபதியை, ஆர்.டி.ஓ.-க்குப் பதிலாகப் போட்டோம். அதுதான் முதலில் நடந்த சம்பவம். ஆனால் அதிலும் தடை இருப்பதால், விசாரணை இன்னும் முடியவில்லை. அதுமாதிரி கடைசி சம்பவம் நீலகிரியில் நடந்தது. அதைப் பற்றி விசாரிக்க கோயம்புத்தூர் ஜில்லா நீதிபதியைப் போட்டு இருக்கிறோம். ஆகவே, நீதிபதியும் விசாரிக்கிறார்கள், ஆர்.டி.ஓ.-வும் விசாரிக்கிறார்கள். ஆர்.டி.ஓ.-வும் மாஜிஸ்ட்ரேட் என்ற ஹோதாவில்தான் விசாரிக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி : கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் தவிர, வயோதிகர்கள், குழந்தைகள் முதலியவர்கள் துப்பாக்கிச் சூட்டால் இறந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர்களா இல்லையா என்று விசாரிக்க முடியாது. பெரிய கூட்டம் எச்சரிக்கை செய்யப்படுகிறது, அதற்குப் பிறகு அவசியமாக இருந்தால் துப்பாக்கிச் சூடு நடக்கிறது. அதில் நிரபராதிகளும் பாதிக்கப்படுவது உண்டு. நஷ்டஈடு கொடுப்பது என்பது அவ்வப்பொழுது விசாரணை செய்து பரிசிலனை செய்து முடிவு எடுக்கப்பட வேண்டிய விஷயம்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, இதுமாதிரியான நிகழ்ச்சிகளில், ஆர்.டி.ஓ. போன்ற நேரிடையான அரசாங்க சிப்பந்திகள் விசாரணையை மேற்கொள்ளாமல், நேரிடையாக அரசாங்க ஆணைக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லாத நீதிபதிகளை விசாரணைக்குப் போடுவது என்கிற முறையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறதா, இல்லாவிட்டால், இனிமேலாவது அதை ஏற்றுக் கொண்டு அவ்விதம் நடத்துவார்களா?

[29th July 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உயர் நீதிமன்ற நீதிபதி விசாரிக்க, இதில் தீர்ப்பு கொடுப்பது ஒன்றும் கிடையாது. தண்டனை அளிப்பதும் கிடையாது. இருக்கிற விஷயம் என்ன என்று பார்க்க வேண்டும். அவ்வளவுதான். அதற்கு விதிப்படி ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தலாம் அதை மாற்றுவதாக உத்தேசம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சில இடங்களிலே ஆர்.டி.ஓ. விசாரணைக்காக அனுப்பப்படுகிறார்கள், சில இடங்களில் நீதிபதிகள் விசாரணைக்கு அனுப்பப்படுகிறார்கள். எந்த அடிப்படையில் நீதிபதியோ, ஆர்.டி.ஓ.-வோ அனுப்பப்படுகிறார்கள் என்பதை விளக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சில இடங்களிலே கலெக்டரே கூட நியமிக்கப்படுகிறார்கள். அங்கங்கே இருக்கும் நிலைமைக்குத் தகுந்தபடி, யார் யாரைப் போடவேண்டும் என்று பரிசிலனை செய்யப்படுகிறது. அரசாங்கம் முடிவு செய்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், துப்பாக்கிச் சூட்டின் காரணமாக இறந்தவர்கள் 50 பேர்கள் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்களில் எத்தனை பேர்கள் மாணவர்கள்? அவர்கள் விஷயத்திலாவது மாணவர்கள் என்று அனுதாபத்தோடு பரிசிலனை செய்து, அவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதிலே கவனிக்க வேண்டியது இவர்கள் கலவரத்திலே சம்பந்தப்பட்டவர்களா இல்லையா என்பது அதைத் தீர்மானிக்க வேண்டும். துப்பாக்கிச் சூடு கொடுப்பதற்கு முன்னால் எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. அதையும் மீறி அவர்கள் கலகம் செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப் பட்டுள்ளவர்கள்

* 24. கேள்வி.—திரு. ப. உ. சண்முகம்:
திரு. செ. மாதவன்:
திரு. மீ. கலியாணசுந்தரம்:
திரு. ஆ. தங்கவேலு:
} கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தமிழ்நாட்டில் இன்னும் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளோர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Two hundred and eighty-six persons are in detention in this State under the Defence of India Rules, 1962.